BRAMPTON **Service and Information Update**

**திருமண உரிமம் கோரும் விண்ணப்பதாரர்களுக்கு அதற்கான செயல்முறையை எளிதாக்கும் வகையில் திருமண உரிமத்தின் அடையாள ஆவணங்களை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் ஒன்றுபடுத்துகிறது**

ப்ராம்ப்ட்டன், ON (அக்டோபர் 21, 2021) – திருமண உரிமம் கோரி விண்னபப்பிக்கின்ற தனி நபர்களுக்கு, அதனை எளிதாக்குவதற்காக, ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாள ஆவணப்பட்டியல்கள் இரண்டு (முதன்மை மற்றும் இரண்டாம் நிலை) என இருந்தது; இப்போது அனைத்து ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாள படிவங்களையும் ஒரே பட்டியலில் கொண்டுவந்து விட்டனர். முன்னதாக விண்ணப்பதாரர்கள் இரண்டு பிரதான அடையாள ஆவணங்கள் அல்லது ஒரு பிரதான அடையாள ஆவணம் மற்றும் ஒரு இரண்டாம் நிலை அடையாள ஆவணம் என சமர்ப்பிக்க வேண்டியிருந்து.

நவம்பர் 1 ஆம் தேதி முதல், அரசு வழங்குகின்ற அடையாள ஆவணங்களின் படிவங்களில் இருந்தவை:

- கனடா நாட்டு கடவுச்சீட்டு(பாஸ்போர்ட்) அல்லது கனடா நாட்டு பயண ஆவணம்
- வேறொரு நாட்டின் கடவுச்சீட்டு
- பிறப்பு சான்றிதழ்
- கனடா நாட்டு குடியுரிமை அட்டை அல்லது சான்றிதழ்
- ஓட்டுனர் உரிமம்
- அரசு வழங்கிய புகைப்பட அடையாள (ID) அட்டை
- நிரந்தர குடியிருப்புக்கான அட்டை
- இந்தியர் எனும் தகுதி குறிக்கும் சான்றிதழ் அட்டை
- நெக்ஸஸ் (Nexus) அட்டை
- ராணுவ அடையாளம் (ID)
- புலம் பெயர்ந்து வந்தவர் என்பதற்கான பதிவு
- கனடா நாட்டில் அகதியாக பாதுகாப்பு கோருகின்ற செல்லத்தக்க ஆவணம்

திருமண உரிமம் கோரி விண்னபப்பிக்கின்றவர்கள் இவற்றையும் கவனிக்க வேண்டும்:

- ஒவ்வொரு விண்ணபப்பதார ருக்கும் அடையாளத்திற்கான இரண்டு (2) பிரதிகள் தேவை
- அடையாளத்திற்கான (ID) பிரதிகள் இரண்டுமே அசலாக இருக்க வேண்டும் (சான்றளிக்கப்பட்ட பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)
- அடையாளத்திற்கான (ID) பிரதிகள் இரண்டுமே காலாவதியாகி இருக்கலாகாது
- அடையாளத்திற்கான (ID) பிரதி ஒன்றில் புகைப்படம் இருக்க வேண்டும்
- அடையாளத்திற்கான (ID) பிரதி ஒன்றில் கையொப்பம் இருக்க வேண்டும்
- அடையாளத்திற்கான (ID) பிரதிகள் இரண்டுமே சட்டப்படியான பெயர் மற்றும் பிறந்த தேதியைக் கொண்டிருக்க வேண்டும்

- அடையாளத்திற்கான (ID) பிரதிகள் இரண்டிலுமே முதல் மற்றும் கடைசி பெயர்கள் ஒரே போல இருக்க வேண்டும் (மத்திம பெயர்/பெயர் முதல் எழுத்துக்கள் திருமண உரிமத்தில் இடம் பெற வேண்டுமாயின் அவையும் இருக்க வேண்டும்)
- பொருந்துமாயின் பெயரை மாற்றியதற்கான சான்றிதழையும் இணைக்க வேண்டும்
- அடையாளத்திற்கான (ID) பிரதிகள் **அனைத்துமே** ஆங்கிலம் மற்றும் ஃப்ரெஞ்சு மொழியில் இருக்க வேண்டும் அல்லது மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு ஒன்ட்டேரியோ மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் வாய்வழி மொழிபெயர்ப்பாளர்கள் சங்கத்தினால் சான்றளிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்

திருமண உரிமம் ஒன்றைப் பெறுவதற்கு, குடியிருப்புவாசிகள் பின்வரும் செயற்படிகளை பூர்த்தி செய்ய வேண்டும்:

1. இங்கு முன்பதிவுக்கான நேரத்தை பதிவு செய்யவும்
2. திருமண உரிமம் கோரும் விண்ணப்பத்தினை நிரப்பி, அச்சுப்பிரதி எடுத்து விண்ணப்பதாரர்கள் இருவரும் கையொப்பமிடுவதை உறுதி செய்ய வேண்டும் (டிஜிட்டல் கையொப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது). முன்பதிந்த நேரத்தில் ஒரே ஒரு விண்ணப்பதாரர் மட்டுமே நேரில் வரலாம்.
3. முழுவதும் பூர்த்தி செய்த மற்றும் கையொப்பமிட்ட விண்ணப்பத்தை, அவற்றுக்கான ஆதார ஆவணங்களுடன் விவாகரத்து (பொருந்தினால்) ஆவணங்களுடன் திட்டமிட்ட முன்பதிந்த நேரத்தில் கொண்டு வரவும்.

குடியிருப்பு வாசிகள் இதற்கான அனைத்து தேவைப்பாடுகள் பற்றி தெரிந்துகொள்ள நகரின் வலைத்தளத்திற்கு வருகை புரியவும் ; ஏனெனில், தேவைப்படும் ஏதேனும் ஆவணத்தை இணைக்கத் தவறும்பட்சத்தில் திருமண உரிமம் வழங்கப்பட மாட்டாது. தகவல்கள் பல்வேறு மொழிகளிலும் கிடைக்கின்றன.

இந்தச் சமயத்தில் குறைவான எண்ணிக்கையிலான முன்பதிவுகளே கிடைக்கும், போகிற போக்கில் பதிவு செய்தல் என்பது இயலாது. பொதுமக்களுக்கான திருமண சடங்குகள் இந்தச் சமயத்தில் ரத்து செய்யப்பட்டுள்ளன.

மேலும் தகவல்களுக்கும் திருமண உரிமம் பெற முன்பதிவு செய்வதற்கும் வருகை தரவும்: www.brampton.ca .

**ஊடக தொடர்பு:**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca